IB DIPLOMA PROGRAMME
PROGRAMME DU DIPLÔME DU BI
PROGRAMA DEL DIPLOMA DEL BI

M06/1/A1TAM/SP1/TAM/TZ0/XX

22060507

**TAMIL A1 – STANDARD LEVEL – PAPER 1**
**TAMOUL A1 – NIVEAU MOYEN – ÉPREUVE 1**
**TAMIL A1 – NIVEL MEDIO – PRUEBA 1**

Monday 22 May 2006 (morning)
Lundi 22 mai 2006 (matin)
Lunes 22 de mayo de 2006 (mañana)

1 hour 30 minutes / 1 heure 30 minutes / 1 hora 30 minutos

---

INSTRUCTIONS TO CANDIDATES

- Do not open this examination paper until instructed to do so.
- Write a commentary on one passage only. It is not compulsory for you to respond directly to the guiding questions provided. However, you may use them if you wish.

INSTRUCTIONS DESTINÉES AUX CANDIDATS

- N'ouvrez pas cette épreuve avant d'y être autorisé(e).
- Rédigez un commentaire sur un seul des passages. Le commentaire ne doit pas nécessairement répondre aux questions d'orientation fournies. Vous pouvez toutefois les utiliser si vous le désirez.

INSTRUCCIONES PARA LOS ALUMNOS

- No abra esta prueba hasta que se lo autoricen.
- Escriba un comentario sobre un solo fragmento. No es obligatorio responder directamente a las preguntas que se ofrecen a modo de guía. Sin embargo, puede usarlas si lo desea.

கீழே இருக்கும் இரண்டு கேள்விகளில் (1.அ அல்லது 1ஆ) ஏதாவது ஒரு கேள்விக்குப் பதில் எழுதவும். கீழே இருக்கும் கேள்விகளைக் கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டிய தேவையில்லை. ஆனால் நீங்கள் அதை ஆதாரமாக வைத்து எழுதலாம்.

*1.* அ

அவனுக்கு துணி நெய்யும் வேலை. அவளுக்கு ராட்டினத்தின் உதவியால் நூல் சுற்றும் தொழில். சிக்கனமாய்க் குடும்பம் நடத்துவதற்குப் போதுமான வருமானம் வந்து கொண்டிருந்தது. கல்யாணமாகி ஏழு எட்டு ஆண்டுகள் ஆன பிறகும் அவர்களுக்கு குழந்தை பிறக்கவில்லை. அவன் அதைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தான். அவளால் அப்படியிருக்க முடியவில்லை. ராமேசுவரம் போவதற்காக பணம் சேர்த்தாள். அவனுக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும் அவளுக்காகப் புறப்பட்டான். தனுஷ்கோடியிலிருந்து திருச்சி வரும்வரை அவர்களுடன் பேசிக் கொண்டும் அவர்கள் பேச்சைக் கவனித்துக் கொண்டும் வந்தேன். அவர்கள் ரயில் பிரயாணத்தை மிகவும் ரசித்து அனுபவித்தார்கள். வருகிற பிச்சைக்காரனுக்கெல்லாம் காசு கொடுத்தார்கள். வெள்ளரிப்பிஞ்சு, ஆரஞ்சு, கிரஷ் எல்லாம் வாங்கினார்கள். திருச்சி சந்திப்பு வந்தவுடன் நாங்கள் விடைபெற்றுப் பிரிந்தோம். அவர்களுக்கா இப்போது பிச்சை எடுக்கும் நிலை?

அன்றைக்கு இரவாவது அவர்களுக்கு நான் கொடுத்த பணத்தில் சோறு கிடைக்கும் என்று நினைத்த போது எனக்குச் சிறிது ஆறுதலாக இருந்தது. அப்போது எதிரே தலைவிரி கோலமாய் அந்தப் பெண் பிள்ளை ஓடி வந்தாள். அதே நெசவாளிப் பெண் தான். என்னை உற்றுப் பார்த்தாள். நானும் பார்த்தேன். ஆ! அவளுடைய பார்வையில் இருந்த துயரம்! "ஐயா! என்னுடைய கைக்குழந்தையைப் பார்த்தீங்களா? பார்த்தீங்களா? என்னுடைய மகனைப் பார்த்தீங்களா? "ஐயா?" "உன்னோட மகனா? உன் மடியில் உட்கார்ந்திருந்தானே? அந்தக் குழந்தையா?" ஆமய்யா, அவனை யாரோ தூக்கிட்டுப் போய்ட்டாங்கய்யா!" "எங்கேயும் போய்விடமாட்டான். பயப்படாதே. எங்கே உன் கணவன்?வா, போலீஸில் புகார் செய்வோம்," என்று அவளை சாந்தப்படுத்தி அவர்கள் இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றேன். அங்கே அவள் கணவன் தலையில் கையை வைத்துக்கொண்டு இடிந்து போய் உட்கார்ந்து இருந்தான். அவன் என்னைப் பார்த்த பார்வை பைத்தியக்காரனுடையதைப் போல இருந்தது. "இங்கே இவரிடம் விட்டுட்டு அரிசி வாங்கப் போனேனுங்க. திரும்பி வந்து பார்க்கிறதுக்கு உள்ளே என் பிள்ளையைக் காணோம்" என்றாள் அவள். அதன் பிறகு அவள் என் முன்னே நிற்கவில்லை. முகத்திலும் நெஞ்சிலும் அறைந்துகொண்டு "என் செல்ல ராஜா! எங்கேடா போனே" என்று கத்திக் கொண்டே கடைத்தெருவுக்கு மத்தியில் பாய்ந்தாள். கையில் குழந்தையோடு போவோரை யெல்லாம் வழி மறித்து நிறுத்தினாள். அழுகையும் புலம்பலும் அதிகமாய் ஒலித்தன. "போலீஸில் புகார் செய்யலாம் வா" என்றேன் அவளிடம். "தேடாத இடமெல்லாம் தேடிட்டேன். போலீஸிலும் எழுதிக் கொடுத்திட்டேனுங்க" என்றாள் அவள். ஐந்து நிமிட நேரம் அங்கு நின்றுவிட்டு பிறகு வீட்டை நோக்கி நடந்தேன். எத்தனையோ வருடங்கள் கழித்து தவமாய்த் தவமிருந்த பிள்ளை இப்போது எங்கே போயிற்று? வீட்டில் என்னுடைய குழந்தையைத் தூக்கிக்கொண்டு என் மனைவி எதிரே வந்த போது எனக்குக் கடைத்தெருவில் காணாமற்போன குழந்தையும் அதற்காக அலறித் துடிக்கும் தாயும் நினைவிற்கு வந்தார்கள். குழந்தையை வாங்கி அன்போடு தழுவிக் கொண்டேன். இரண்டு நாட்கள் சென்றன. வாசலில் மாம்பழம் விற்பவனின் சத்தம் கேட்டது. குரல் கொடுத்துக் கொண்டே பழம் வாங்குவதற்காக வெளியே வந்தேன். பழம் விற்பவன் வேறு யாருமில்லை. சேலத்துக்கார நெசவாளி இளைஞன் தான். உயர்ந்த ரக மாம்பழங்களைப் பொறுக்கி எடுத்தேன். அவன் உதடுகள் துடித்தன. கண்கள் கலங்கின. "பிள்ளை அகப்பட்டு விட்டானா?" என்று கேட்டேன். "அவன் கிடைக்க மாட்டாங்க" என்றான். "அகப்படமாட்டானா? ஏன்?"

என்றேன். "பிள்ளை காணாமல் போகலீங்க. இந்தப் பாவி அவனை அம்பது ரூபாய்க்கு வித்துட்டேனுங்க." "பிள்ளையை விற்றுவிட்டாயா?" அவன் திண்ணையில் உட்கார்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டான். "பிள்ளையைக் காப்பாத்தறத்துக்காக அவ பட்டினி கிடந்து உயிரை விட்டிடுவா போல இருந்தது. கிடைத்ததையெல்லாம் பிள்ளைக்கே கொடுத்தா. அப்படிக் கொடுத்துக்கூட அந்தப் பிள்ளைக்கு வயிறு நெரையலே. அதற்காக பிழைக்கிறத்துக்கு வேறெ வழியுமில்லேங்க. வெளியூர்க்கார சேட் ஒருத்தர் பிள்ளையைக் கேட்டார். நல்லா வளர்க்கிறதாகச் சொன்னார். நாங்க எல்லாரும் பிழைக்கிறதுக்கு அதுதான் வழிண்ணு நெனச்சு பிள்ளையை வித்துட்டேனுங்க. அது அவளுக்கு தெரியாதுங்க" என்றான். நான் பெருமூச்சு விட்டேன். அவன் பேசினான். "இந்தப் பாவி கையாலாகாதவனுங்க, பிள்ளையைத் தூக்கிக் கொடுத்தேன். அந்தப் பணத்தை வெச்சுத் தான் இப்ப மாம்பழ வியாபாரம் செய்யறேன். அவகிட்ட நீங்க தான் ஐம்பது ரூபாய் கடன் கொடுத்து உதவினதாகச் சொல்லியிருக்கேன். பிள்ளையை நான் வித்தது அவளுக்குத் தெரிஞ்சா அவ உடனே ஆத்திலே விழுந்து "செத்துப் போயிருப்பா" என்றான். "எப்படியப்பா உனக்கு மனசு வந்தது? ராமேசுவரம் போய் வரங் கேட்டுப் பிறந்த பிள்ளையாயிற்றே" என்றேன் நான். அவன் வருத்தத்தோடு சிரித்து விட்டு "என்னைப் போல இருக்கிறவங்களுக்கெல்லாம் இனிமேல் பிள்ளை வரம் வேண்டாங்க. பசியா வரம் படச்சவங்களுக்குத்தான் பிள்ளை வரம் வேணுமுங்க" என்றான். அவனுடைய அந்தச் சொற்கள் வெகுநேரம் என் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருந்தன.

பிள்ளை வரம் – சிறு கதைகள் – எழுதியவர் அகிலன்

– ஆசிரியர் ஏழ்மையை எவ்வாறு சித்தரித்துக் காட்டுகிறார்?

– கணவன் – மனைவி உறவையும் அதன் முக்கியத்தையும் ஆசிரியர் எவ்வாறு இந்தப் பத்தியில் கூறியுள்ளார்?

– ஆசிரியர் இந்தக் கதையில் தானே மற்ற பாத்திரங்களுடன் கலந்து பேசுவது போல் எழுதி உள்ளார். இதனால் இவருக்கு என்ன கிடைக்கிறது?

– இதைப் படித்த பிறகு உங்களுக்கு என்ன விதமான எண்ணங்களும் உணர்ச்சிகளும் வருகின்றன?

**1. ஆ**

**கம்பராமாயணம் – யுத்த காண்டம்– அங்கதன் தூதுப் படலம்**

நெடுந்தகை விடுத்த தூதன் இனையன நிரம்ப எண்ணி,
கடுங் கனல் விடமும் கூற்றும் கலந்து கால் கரமும் காட்டி,
விடும் சுடர் மகுடம் மின்ன, விரி கடல் இருந்தது அன்ன
கொடுந் தொழில் மடங்கல் அன்னான் எதிர் சென்று, குறுகி நின்றான்.

நின்றவன் தன்னை அன்னான் நெருப்பு எழ நிமிரப் பார்த்து, 'இங்கு,
இன்று, இவண் வந்த நீ யார்? எய்திய கருமம் என்னை?
கொன்று இவர் தின்னாமுன்னம் கூறுதி, தெரிய' என்றான்;
வன் திறல் வாலி சேயும், வாள் எயிறு இலங்க நக்கான்.

'பூத நாயகன், நீர் சூழ்ந்த புவிக்கு நாயகன், அப் பூ மேல்
சீதை நாயகன், வேறு உள்ள தெய்வ நாயகன், நீ செப்பும்
வேத நாயகன், மேல் நின்ற விதிக்கு நாயகன், தான் விட்ட
தூதன் யான்; பணித்த மாற்றம் சொல்லிய வந்தேன்' என்றான்.

'அரன்கொலாம்? அரிகொலாம்? மற்று அயன்கொலாம் என்பார் அன்றி
குரங்கு எலாம் கூட்டி வேலை குட்டத்தைச் சேது கட்டி,
"இரங்குவான்ஆகில், இன்னம் அறிதி" என்று உன்னை ஏவும்
நான்கொலாம் உலகநாதன் என்று கொண்டு, அரக்கன் நக்கான்.

'கங்கையும் பிறையும் சூடும் கண்ணுதல், கரத்து நேமி
சங்கமும் தரித்த மால், மற்று இந் நகர்தன்னைச் சாரார்;
அங்கு அவர் தன்மை நிற்க, மனிசனுக்காக அஞ்சாது,
இங்கு வந்து இதனைச் சொன்ன தூதன் நீ யாவன்?' என்றான்.

'இந்திரன் செம்மல், பண்டு, ஓர் இராவணண் என்பான் தன்னை
சுந்தரத் தோள்களோடும் வாலிடைத் தூங்கச் சுற்றி,
சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன், தேவர் உண்ண
மந்தரப் பொருப்பால் வேலை கலக்கினான், மைந்தன்' என்றான்.

'உந்தை என் துணைவன் அன்றே? ஓங்கு அறச் சான்றும் உண்டால்;
நிந்தனை இதன்மேல் உண்டோ, நீ அவன் தூதன் ஆதல்?
தந்தனென் நினக்கு யானே வானரத் தலைமை; தாழா
வந்தனை; நன்று செய்தாய், என்னுடை மைந்த!' என்றான்.

"தாதையைக் கொன்றான் பின்னே தலை சுமந்து, இரு கை நாற்றி,
பேதையன் என்ன வாழ்ந்தாய்" என்பது ஓர் பிழையும் தீர்ந்தாய்;
சீதையைப் பெற்றேன்; உன்னைச் சிறுவனுமாகப் பெற்றேன்;
ஏது எனக்கு அரியது?' என்றான் – இறுதியின் எல்லை கண்டான்.

"அந் நரர் இன்று, நாளை, அழிவதற்கு ஐயம் இல்லை;
உன் அரசு உனக்குத் தந்தேன்; ஆளுதி, ஊழி காலம்;
பொன் அரி சுமந்த பீடத்து, இமையவர் போற்றி செய்ய,
மன்னவன் ஆக, யானே சூட்டுவென் மகுடம்" என்றான்.

அங்கதன் அதனைக் கேளா, அங்கையோடு அங்கை தாக்கி,
துங்க வன் தோளும் மார்பும் இலங்கையும் துளங்க, நக்கான்;
"இங்கு நின்றார்கட்கு எல்லாம் இறுதியே" என்பது உன்னி,
உங்கள்பால் நின்றும் எம்பால் போந்தனன், உம்பி என்றான்.

'வாய் தரத்தக்க சொல்லி, என்னை உன் வசஞ்செய்வாயேல்,
ஆய்தரத் தக்கது அன்றோ, தூது வந்து அரசது ஆள்கை?
நீ தரக் கொள்வென் யானே? இதற்கு இனி நிகர் வேறு எண்ணின்,
நாய் தரக் கொள்ளும் சீயம், நல் அரசு!' என்று நக்கான்.

கம்பராமாயணம் (இராமாவதாரம்) பழைய இதிகாசம்
எழுதியவர் – கம்பர்
1976 ம் ஆண்டுப் பதிப்பு
பதிப்பித்தவர்கள் – கம்பன் கழகம் – சென்னை

– "ராமரின் கதா பாத்திரத்தின் முக்கியத்தை ஆசிரியர் எவ்வாறு இதைத் தன்னுடைய பாட்டில் விளக்குகிறார்?

– ஆசிரியர் கூறிய உவமைகள் இந்தப் பாட்டிற்கு எவ்வளவு வலிமை வாய்ந்ததாக உள்ளது என்பது பற்றி விவாதிக்கவும்.

– ஆசிரியர் தன் எழுத்தின் மூலம் எவ்வாறு அங்கதன், இராவணன் குணங்களை விளக்குகிறார்?

– ஆசிரியர் உரையாடல் மூலமாக எவ்வாறு பாட்டின் முக்கியமான கருத்தை விளக்குகிறார்?